N S M
National Museum
of Singapore

SG
60

# SINGAPORE ODYSSEA

## A Journey Through Time

காட்சிக்கூட வழிக்காட்டி

## ஆலோசனை

காட்சிக்கூடத்தின் முன் பகுதியில் ஒளி வெளிச்சம் குறைவாக உள்ளது. அங்கு ஒளிக்காட்சி ஒளிபரப்பப்படுகிறது.

தயவுசெய்து இந்தப் பகுதிகளில் கவனமாகச் செல்லுங்கள்.

## காட்சிக்கூடம் விதிகள்

**உணவும் பானமும் உட்கொள்ளக்கூடாது**



**ஒளிக்கீற்றுடன் புகைப்படப் எடுக்கக்கூடாது**



**கலைப்பொருட்களைத் தொடக்கூடாது**



**பெரிய பொருட்களை எடுத்துவரக்கூடாது. உங்கள் முதுகுப்பையை முன்பக்கத்தில் தூக்கிச் செல்லவும்.**



**தயவுசெய்து மெல்லப் பேசுங்கள்**



**தயவுசெய்து பிள்ளைகளைக் கவனியுங்கள்**



# Singapore Odyssea : A Journey Through Time

## *சிங்கப்பூர்க் கடலுலகம்: காலத்தின் பயணம்*

*சிங்கப்பூர்க் கடலுலகம்: காலத்தின் பயணம் கண்காட்சிக்கு உங்களை வரவேற்கிறோம். கடலை மையப்படுத்தி சிங்கப்பூரின் வரலாற்றைத் தத்ரூபமாகப் படைக்கும் இருவழித்தொடர்புப் பல்லூடக அனுபவக் கண்காட்சி இது. பல்லாண்டு காலமாக வட்டார நாடுகளோடும் உலகோடும் சிங்கப்பூருக்கு இருந்து வந்துள்ள கடல்வழித் தொடர்பைக் கண்காட்சி விவரிக்கிறது. இந்தத் தொடர்பே நமக்கான அடையாளத்தை உருவாக்கித் தந்தது. இன்றைய காலகட்டத்தைத் துவக்கமாகக் கொண்ட இக்கண்காட்சி, சிங்கப்பூரின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைக் காட்டிய பிறகு, நமது கடந்தகாலத்தின் முக்கிய தருணங்களையும் நாட்டுப்புறக் கதைகளையும் கண்டறிய உங்களை அக்காலத்திற்கு அழைத்துச் செல்லும்.*

*கண்காட்சியின் அக்காலப் பயணத்தில், உங்களது மின்னிலக்க மாயாஜாலத் தோழர் உங்களுடன் துணை வரும். நீரிலும், நிலத்திலும், ஆகாயத்திலும் வாழும் உள்நாட்டு உயிரினங்களைப் போல் வடிவமைக்கப்பட்ட மாயாஜாலத் தோழர்கள், சிங்கப்பூரின் 700 ஆண்டுகால வரலாற்றில் உங்களை அலைத்துச் சென்று, நவீனகால அடையாளச் சின்னங்கள் முதல் பதினான்காம் நூற்றாண்டின் பிரபல இதிகாசங்கள் வரை கண்டறியத் துணை புரியும். நமது பல்லுயிரினங்களின் அழகையும் நீங்கள் கண்டு ரசிக்கலாம். சிங்கப்பூரின் இயற்கைச் சூழல் பல நூற்றாண்டுகளாக எவ்வாறு மாறி வந்துள்ளது என்பதையும், நமது எதிர்காலத்தை*

*எவ்வாறு நிர்ணயிக்கப் போகிறது என்பதையும் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.*

*சிங்கப்பூர்க் கடலுலகம்: காலத்தின் பயணம் கண்காட்சி, வசீகரிக்கும் முறையில் கதைகள் சொல்லி கடந்த காலத்தை உயிர்ப்பிக்கிறது. மின்னிலக்க உயிரோவியங்கள், புதிய இசை மெட்டு, படைப்பாற்றல் தொழில்நுட்பம், கலைநயம் ஆகியவற்றுடன் சிறந்த அனுபவத்தை வழங்கும் இந்தக் கதைகள், கற்பனையையும், வியப்பையும், உற்சாகத்தையும் தூண்டும். சிங்கப்பூரின் வளமான வரலாற்றைப் புதிய கண்ணோட்டத்தில் பார்த்து ரசிக்க இந்த அனுபவப் பயணத்தில் எங்களோடு உலா வாருங்கள்.*

## *Shaw Foundation கண்ணாடி ரொட்டன்டா*

*சிங்கப்பூர்க் கடலுலகம்: காலத்தின் பயணம் கண்காட்சி, சிங்கப்பூர்த் தேசிய அரும்பொருளகம் ஷா அறநிறுவனக் கண்ணாடிக் கவிமாடத்தில் படைக்கப்படுகிறது. இந்தக் கவிமாடம் 2000-களில் கட்டப்பட்டது. ஷா சகோதரர்களால் 1957-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஷா அறநிறுவனம், சிங்கப்பூரின் ஆகப்பெரிய கொடை அமைப்புகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்த அறநிறுவனம், கல்வி, சமூக நலன், மருத்துவம், கலை, மரபுடைமை ஆகிய துறைகளுக்குச் வலுவான ஆதரவளிக்கிறது. கண்ணாடிக் கவிமாடத்திற்கும் தாராளமாக நன்கொடை வழங்கியுள்ளது.*

# Introduction

## அறிமுகம்

*கண்ணாடிக் கவிமாடத்தினுள் அடியெடுத்து வைத்தவுடன், சிங்கப்பூரின் வழியான வணிகப் பாதைகளைக் காட்டும் அற்புதமான ஒளிக்காட்சியை வருகையாளர்கள் காண்பர். காலனித்துவ ஆட்சிக்கு முந்திய காலகட்டத்திலிருந்து இந்நாள் வரையிலான வணிகப் பாதைகளின் இந்தப் பரிணாமம், காலங்காலமாக நீடித்துவரும் சிங்கப்பூரின் உலகளாவியச் செல்வாக்கையும் இணைப்பையும் பிரதிபலிக்கிறது.*

*ஒளிக்காட்சிக்குப் பிறகு சிங்கப்பூரின் அண்மை எதிர்காலத்தைக் காட்சிவடிவில் காணலாம். எதிர்கால உணர்வு, இணைப்பு, பசுமை அனைத்தும் உள்ளடங்கிய நீடித்து நிலைக்கவல்ல, வாழச்சிறந்த நகரமாகத் திகழ்வதே சிங்கப்பூரின் தொலைநோக்கு. அடர்ந்த பசுமைக்கு மத்தியில் காட்சியளிக்கும் அடையாளம் காணக்கூடிய நகர்ப்புறக் கட்டடங்களின் புறவடிவங்களும் உத்தேச மேம்பாடுகளும், சிங்கப்பூரின் 2030 பசுமைத் திட்டத்தை எடுத்துக்காட்டுகின்றன. சுழல்வடிவச் சாய்வுப்பாதையில் நான்கு பாகங்களாகப் படைக்கப்பட்டிருக்கும் சிங்கப்பூரின் கடந்த காலத்திற்கு நிகழ் காலத்திலிருந்து பயணம் செல்வதற்கான அரங்கை இது அமைத்துத் தருகிறது.*

# Episode 1 : Setting Sail

## *பாகம் 1: கப்பல் பயணம்*

*இந்தப் பாகம், சிங்கப்பூரின் நிகழ்காலத்திலிருந்து சுதந்திரக் காலத்திற்கான பயணத்தை எடுத்துரைக்கிறது. சிங்கப்பூரின் பொருளியல் வளர்ச்சிக்கும் அனைத்துலக நகரமாக நன்மதிப்பு பெறுவதற்கும் கடல் எந்த அளவுக்கு முக்கியமாகத் திகழ்ந்தது என்பதை இந்தப் பாகம் எடுத்துரைக்கிறது. சிங்கப்பூரைச் சூழ்ந்திருக்கும் கடலும், அதிலுள்ள 60க்கும் மேற்பட்ட தீவுகளும் கடல்வாழ் உயிரினங்களுக்குப் புகலிடம் அளிக்கின்றன. அதுமட்டுமன்றி, உலகின் ஆகப் பசுமையான நகரங்களில் ஒன்றான சிங்கப்பூர், உண்மையிலேயே இயற்கையில் ஒரு நகரம் என்பதை நிரூபிக்கும்வண்ணம், இங்குள்ள வீடுகள் இயற்கையாலும் பசுமைப் பரப்புகளாலும் சூழப்பட்டுள்ளன. இந்தப் பாகத்தில், வலசை செல்லும் ஆயிரக்கணக்கான பறவைகளின் இடைநிறுத்தமான சுங்கை பூலோ ஈரநிலக் காப்பகம், உலகில் அதிகப் போக்குவரத்துள்ள விமான நிலையங்களில் ஒன்றான சாங்கி விமான நிலையம் போன்ற அனைத்துலகப் புகழ்பெற்ற இடங்கள் இடம்பெற்றுள்ளன.*

# Episode 2 : Riding Out the Storm

## *பாகம் 2: கடந்துவந்த இக்கட்டான சூழ்நிலைகள்*

*அடுத்த பாகத்தில், போருக்குப் பிந்திய காலகட்டத்திலிருந்து போர்க்காலம் தொடங்கிய காலம் வரை சிங்கப்பூரில் நிகழ்ந்த முக்கிய தருணங்களை நாம் கண்டறிவோம். சிங்கப்பூருக்கு 1959-ல் கிடைத்த தன்னாட்சி, 9 ஆகஸ்ட் 1965 அன்று கிடைத்த சுதந்திரம், மற்றும் அவசரத் தேவையாக கட்டப்பட்ட வீடுகள், தொழிற்சாலைகள், உள்கட்டமைப்புகள் ஆகியவை முக்கிய அங்கங்களாக இடம்பெற்றுள்ளன. இந்தப் பாகம் முழுவதும் நீரோட்டம் கருப்பொருளாகத் திகழ்கிறது. கொட்டும் மழையில் 1966-ஆம் ஆண்டு நடைபெற்ற மறக்கமுடியாத முதல் தேசிய நாள் அணிவகுப்பு, போருக்குப் பிந்திய காலகட்டத்தில் நகர்ப்பகுதியில் பெரும் சேதத்தையும் இடையூறுகளையும் உண்டாக்கிய மோசமான வெள்ளப்பெருக்கு ஆகியவை இதில் உள்ளடங்கும். இரண்டாம் உலகப் போரின் சண்டைகளுக்கும் கடற்படை மோதல்களுக்கும்கூடக் கடல் சாட்சியாக இருந்தது. அந்தக் கடலில்தான் ஹெச்எம்எஸ் பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ், ஹெச்எம்எஸ் ரிபல்ஸ் போர்க்கப்பல்கள் மூழ்கின. ஜப்பானியரின் தாக்குதல்களுக்கு உள்ளாகி 1942-ஆம் சிங்கப்பூர் ஆக்கிரமிக்கப்பட்ட வரலாறும் இங்கு படைக்கப்பட்டுள்ளது.*

**<u>பாகத்தில் பயன்படுத்தப்பட்ட ஒலிப்பதிவு</u>**

*திரு லீ குவான் யூ ஆற்றிய "சிங்கப்பூர்ப் பிரகடனம், 9 ஆகஸ்ட் 1965" உரையின் மறுபதிவு (சாரம்)*

*ஆதாரம்: மீடியாகார்ப் பிரைவெட் லிமிடெட், சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*

# Episode 3 : Age of Exploration

## *பாகம் 3: புத்தாய்வு காலகட்டம்*

*மூன்றாவது பாகம் காலனித்துவ ஆட்சியின்கீழ் இருந்த சிங்கப்பூரைப் விளக்குகிறது. செழிப்பான துறைமுக நகரத்திற்கான நுழைவாயிலாகத் திகழ்ந்த கடல், வெப்பமண்டலமான சிங்கப்பூரின் கரைகளுக்கு வணிகர்கள், பயணிகள், குடியேறிகள் எனப் பலரையும் வரவேற்றது. கடலோர நீர்முகப்பில் பல்வேறு படகுப் போட்டிகளும் நடைபெற்றன. புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் நடைபெறும் படகுப் போட்டி அவற்றுள் ஒன்று. சிங்கப்பூர் ஆற்றங்கரை நெடுகிலும் கடைவீடுகள் வரிசையாக அமைந்திருந்தன. அவை தொழிலிடமாகவும் தங்குமிடமாகவும் இருந்தன. அதே சமயத்தில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் துரித வளர்ச்சியால் சுற்றுப்புறம் பாதிப்படைந்தது. மிளகு, கெம்பியர் பதச்சாறு சேடி போன்ற வணிகப் பயிர்களை வளர்ப்பதற்காக இயற்கைக் காடுகள் அழிக்கப்பட்டன.*

# Episode 4 : Shores of Singapura

## *பாகம் 4: “சிங்கப்பூராவின்” கரைகள்*

*இந்த இறுதிப் பாகத்தில், காலனித்துவ ஆட்சிக்கு முந்திய காலகட்டத்தின் சிங்கப்பூரை வந்தடைகிறோம். கடலைச் சார்ந்து வாழ்ந்துவந்த மக்களின் கடலுலகையும், சிங்கப்பூரைப் பற்றிய இதிகாசங்கள், பழங்கதைகள் ஆகியவற்றையும் இங்கு காண்போம். பலெம்பாங் இளவரசர் சங் நீல உத்தமர், தீவை வந்தடைந்தபோது சிங்கம் போன்றதொரு விலங்கைப் பார்த்ததாக நினைத்து, சமஸ்கிருத மொழியில் "சிங்க நகரம்" என்று பொருள்படும் "சிங்கப்பூரா" எனப் பெயரிட்டார். மலாய் மொழியில் ‘‘கடல்வாழ் மக்களைக்’’ குறிக்கும் ‘‘ஓராங் லாவுட்’’ மக்கள் சிங்கப்பூரா தீவில் வாழ்ந்துவந்தனர். அவர்கள் மீன் பிடிப்பதிலும் கடற்பயணம் செல்வதிலும் கைதேர்ந்தவர்கள். வாள்மீன்களின் தாக்குதலைத் தடுப்பதற்காக வாழைமரக் கன்றுகளைக் கடலோரத்தில் வரிசையாக ஊன்றி சுவர் கட்டிய சிறுவனின் கதையும், ‘‘படாங்’’ எனும் பலசாலி வீசிய பாறாங்கல் சிங்கப்பூர் ஆற்றுமுனையில் விழுந்த கதையும் இந்தப் பாகத்தில் படைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாறாங்கல்தான் ‘சிங்கப்பூர்க் கல்' என்று கருதப்படுகிறது, இதில் பொறிக்கப்பட்டுள்ள சமஸ்கிருதக் கல்வெட்டின் அர்த்தம் இன்னும் முழுமையாகக் கண்டறியப்படவில்லை.*

# A Day in Singapore's History

## *சிங்கப்பூர் வரலாற்றில் ஒரு நாள்*

*இந்த வரலாற்றுப் பயணம், கவிமாடத்தின் அடிவாரத்தில் உச்சக்கட்டத்தை அடையும். அங்கு நீர்வீழ்ச்சி இரண்டாகப் பிரிந்து, சிங்கப்பூர் வரலாற்றின் நான்கு முக்கிய தருணங்களைக் காட்டும். சிங்கப்பூரா காலத்து கடல்நாகப்பல் நீரிணையில் பூர்வக் குடியினர் இரவு நேரத்தில் கப்பல்களுக்கு வழிகாட்டும் காட்சி முதலில் இடம்பெறுகிறது. பிறகு, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சிங்கப்பூர் ஆற்றங்கரையில் மக்களின் மாலை நேர வவாழ்க்கைமுறையை காணலாம். இதனைத் தொடர்ந்து, சிங்கப்பூர் வீழ்ச்சியடையவிருந்த சமயத்தில் குடிமக்கள் நாட்டைவிட்டுச் செல்ல முயன்ற பகல்நேரக் காட்சி இடம்பெறுகிறது. முடிவில், இன்றைய சிங்கப்பூரின் காலைப்பொழுதில் அலையேற்றப் பகுதியை ஆராயும் காட்சி அரங்கேறும்.*

# Welcome to the Bottom of the Sea

## *ஆழ்கடல் உங்களை வரவேற்கிறது*

*உலக அரங்கில் நமக்கான இடத்தைப் புரிந்துகொள்ள இதிகாசங்கள் துணை புரிகின்றன. ஒரு பழங்காலத்து மலாய் நாட்டுப்புறக் கதை, நடுக்கடலில் "புசாட் தசெக்" (மலாய் மொழியில் "பெருங்கடலின் தொப்புள்") எனும் பெரிய நீர்ச்சுழல் சுழல்வதாகச் சொல்கிறது. இந்த நீர்ச்சுழலுக்குள் வாழ்வளிக்கும் மந்திர மரம் இருக்கிறது. அதன் பெயர் "பாவ்ஹ் ஜாங்கி". இந்த மரத்தின் வேர்கள் ஒரு நண்டுக்கு அடைக்கலம் தருவதாகக் கதையில் கூறப்படுகிறது. அந்த நண்டு மிகப்பெரியது என்றும், அது தினந்தோறும் நீர்ச்சுழலுக்கு உள்ளேயும் வெளியேயும் சென்று வரும்போது நீர்ப்பெருக்கு ஏறி இறங்குவதாகவும் சொல்லப்படுகிறது.*

*உங்களின் சிங்கப்பூர்க் கடலுலகப் பயணம் நிறைவடையும் இவ்வேளையில், காலத்தின் நினைவலைகளில் நீங்கள் மேற்கொண்ட பயணத்தையும், நேற்றும், இன்றும், நாளையும் சிங்கப்பூரை வடிவமைப்பதில் கடலுக்குள்ள தவிர்க்க முடியாத பங்கையும் சிந்தித்துப் பாருங்கள். இப்பயணம் நம்மை ஒரு முக்கிய செயலுக்கு அழைக்கிறது - உங்கள் மாயாஜாலத் தோழர்கள் குறிக்கும் உண்மை உயிரினங்களும், சிங்கப்பூர் மக்களும் வளமாக வாழக்கூடிய பசுமையான, நிலைபேறான இல்லத்தை உருவாக்க நாம் முயற்சி எடுக்க வேண்டும்.*

*இதிகாசங்கள் பற்றி மேல்விவரம் அறிய, QR குறியீட்டை வருடி காட்சிக்கூட வழிகாட்டியைப் பார்க்கலாம்*

# Myths in *Singapore Odyssea*

## *சிங்கப்பூர்க் கடலுலகம் இதிகாசங்கள்*

*இங்கு இடம்பெற்றுள்ள இதிகாசங்கள், 13, 14-ஆம் நூற்றாண்டுகளின் ஆரம்பகால நவீன மலாய் உலகில் சிங்கப்பூரின் உள்ளடக்கத்தை எடுத்துரைக்கின்றன. செஜாரா மலாயுவில் (மலாய் வரலாற்றுத் தொகுப்பு) தெமாசெக் அல்லது சிங்கப்பூரா எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் சிங்கப்பூர்த் தீவு, மலாய் உலகில் செழிப்பான வணிகக் குடியேற்றமாகத் திகழ்ந்தது. சீனா, தெற்காசியா, இன்றைய தென்கிழக்காசிய வட்டாரம் ஆகியவற்றின் வணிகக் குறுக்குச்சந்திப்பில் தீவு அமைந்திருந்தது.*

*மாய மரத்தடியில் வாழ்ந்துவந்த இராட்சத நண்டை வர்ணிக்கும் "பாவ்ஹ் ஜாங்கி" இதிகாசம், பழமையான ஒரு மலாய் நம்பிக்கையின் அடிப்படையிலானது. சங் நீல உத்தமர், வாள்மீன் தாக்குதல், ராஜ சூலன் பழங்கதைகள், ஆரம்பகால சிங்கப்பூரின் தோற்றம் பற்றிய புரிந்துணர்வை வளர்த்துக்கொள்ள நமக்கு உதவியுள்ளன. "பாவ்ஹ் ஜாங்கி" தவிர, மற்ற பழங்கதைகள் அனைத்தும் செஜாரா மலாயுவில் குறித்து வைக்கப்பட்டுள்ளன. மலாக்கா சுல்தான்களின் வம்சாவளியை விவரிக்கும் இலக்கியப் படைப்பு இது. செஜாரா மலாயு தொகுப்பு வெவ்வேறு காலகட்டங்களில் பல்வேறு கல்விமான்கள், எழுத்தாளர்களால் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதால், ஒவ்வொரு கதையும் பல்வேறு விதமாகக் கூறப்படுகின்றன. அப்படி இருந்தாலும், ஆரம்பகால சிங்கப்பூரை வட்டார வரலாற்றுடன் இணைக்க*

*உதவிய மலாய் வரலாற்றின் முக்கிய மூலமாக செஜாரா மலாயு நீடிக்கிறது.*

***<u>மாய மரத்தடியில் இராட்சத நண்டு</u>***

*பண்டைக்கால மலாய் நாட்டுப்புறக் கதைப்படி, பெருங்கடலின் மத்தியில் "புசாட் தசெக்" எனும் பெரிய நீர்ச்சுழல் இருக்கிறது. இந்த நீர்ச்சுழலின் மையப் பகுதியில், "பாவ்ஹ் ஜாங்கி" எனும் மாய மரம் வளர்கிறது. அந்த மரத்தின் பழங்களுக்கு குணப்படுத்தும் தன்மைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. "பாவ்ஹ் ஜாங்கி" மரத்தின் வேர்களில் இராட்சத நண்டு வசிக்கிறது. நண்டின் நடமாட்டம், கடலின் நீர்ப்பெருக்கைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக நம்பப்படுகிறது. நண்டு அதன் வசிப்பிடத்திலிருந்து வெளியே செல்லும்போது நீர்ப்பெருக்கு குறையும். அது திரும்பி வரும்போது வசிப்பிடத்திலிருந்து வெளியாகும் நீரால் நீர்ப்பெருக்கு உயரும். இந்த இதிகாசத்தின் பிற கூற்றுகள், "பாவ்ஹ் ஜாங்கி" மரத்தில் கடல்நாகங்களும் கருடன்களும் வாழ்ந்து வந்ததாகச் சொல்லி, மனித உலகுக்கும் ஆன்மீக உலகுக்கும் இடையே ஒரு தொடர்பை உண்டாக்குகின்றன. பண்டைக்கால மலாய் பிரபஞ்சத்தில் இந்த மரம் வாழ்வளிக்கும் மரமாகத் திகழ்ந்ததை இது எடுத்துக்காட்டுகிறது.*

***<u>சங் நீல உத்தமர், சிங்கப்பூராவின் முதல் மன்னர்</u>***

*செஜாரா மலாயு பதிவுகளின்படி, பலெம்பாங் இளவரசர் சங் நீல உத்தமர் (ஸ்ரீ திரி புவானா என்றும் அறியப்படுபவர்), புதிய*

நிலங்களைக் கண்டறிவதற்காகத் தமது நகரிலிருந்து புறப்பட்டுச் சென்றபோது, தெமாசெக் தீவையும் அதன் வெண் மணலையும் தொலைதூரத்தில் இருந்தே கவனித்துவிட்டார். தீவை நோக்கி வந்து கொண்டிருந்தபோது, கப்பல் புயலில் சிக்கியது. கப்பல் கவிழ்வதைத் தடுக்க, இளவரசர் தனது மகுடத்தைக் கடலில் வீசினார். கடல் அலைகள் தணிந்து, தெமாசெக் கரைகளை சங் நீல உத்தமர் பாதுகாப்பாக வந்தடைந்தார். தீவில் கம்பீரமான மிருகம் ஒன்றை அவர் கண்டார். அது ஒரு சிங்கம் என்று அவரிடம் தெரிவிக்கப்பட்டது. சிங்கத்தைக் கண்டு ஊக்கமடைந்த சங் நீல உத்தமர், தீவுக்கு "சிங்கப்பூரா" (சமஸ்கிருத மொழியில் "சிங்க நகரம்") எனப் பெயரிட முடிவெடுத்து, அதன் முதல் மன்னரானார்.

அச்சம்பவம் நடந்து சில நூறு ஆண்டுகள் கடந்துவிட்டன. சிங்கப்பூரா இன்று சிங்கப்பூர் என்றறியப்படுகிறது. இருந்தாலும், சங் நீல உத்தமரைப் பற்றிய பிரபலமான பழங்கதை, இன்றுவரை இந்நாட்டின் தோற்றத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது.

## <u>வாள்மீன் தாக்குதல்</u>

பதினான்காம் நூற்றாண்டு சிங்கப்பூரில் வாள்மீன்கள் தாக்குதல் நடத்தியதாகச் சொல்லும் பழங்கதையை *செஜாரா மலாயு* குறித்து வைத்துள்ளது. இந்தக் கதையின்படி, வாள்மீன்கள் கடலிலிருந்து தவ்விக்குதித்து, கரையோரத்தில் இருந்த கிராமவாசிகளையும் மீனவர்களையும் தங்களது கூரான நீள்மூக்கினால் குத்தித் தாக்கின. அந்தக் காலகட்டத்தில் மன்னராக ஆட்சி புரிந்துவந்த பாதுகா ஸ்ரீ மஹாராஜா, கடற்கரையைப் பாதுகாக்க தனது

*சேவகர்களை அனுப்பினார். ஆனால், அவர்களால் வாள்மீன்களை விரட்டியடிக்க முடியவில்லை. அப்போது, கடற்கரையில் வாழைமரத் தண்டுகளை வரிசையாக அடுக்கி சுவர் எழுப்பலாம் என சாமர்த்தியமான ஒரு சிறுவன் கூறிய யோசனை பலனளித்தது. வாள்மீன்களின் நீள்மூக்குகள் மரத் தண்டுகளில் சிக்கிக் கொண்டதால், அவற்றைப் பிடிக்க முடிந்தது.*

*உயிரைக் காத்த சிறுவனைக் கிராமவாசிகள் போற்றிப் பாராட்டினார்கள். ஆனால், பொறாமை குணம்படைத்த மன்னன், சிறுவனைப் பார்த்து மிரண்டார். தனது சிம்மாசனத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, சிறுவனைக் கொன்றுவிடுமாறு உத்தரவிட்டார். செஜாரா மலாயுவில் கதை இத்துடன் முடிவடைகிறது. ஆனால், நாட்டுப்புற வழக்கில் கதை தொடர்ந்து திரிந்தது. அந்தச் சிறுவன் கொல்லப்பட்ட குன்றிலிருந்து இரத்தம் வடிந்தோடி, பூமியைச் செந்நிறமாக்கியதாக நம்பப்பட்டது. இதுவே மலாய் மொழியில் "செம்மலை" என்பதைக் குறிக்கும் "புக்கிட் மேரா" என்ற பெயருக்குக் காரணமாகக் கூறப்படுகிறது.*

*இன்றைய சிங்கப்பூரில், மத்திய வட்டாரத்தின் தென் பகுதியில் அமைந்திருக்கும் குடியிருப்பு வட்டாரங்கள் "புக்கிட் மேரா", "ரெட்ஹில்" எனப் பெயரிடப்பட்டுள்ளன.*

**<u>ராஜ சூலனின் கதை</u>**

*செஜாரா மலாயு* பதிவுகளின்படி, தென்னிந்திய சோழர் சாம்ராஜ்ய மன்னரைப்போல் உருவாக்கப்பட்ட கதாபாத்திரமான ராஜ சூலன், சீனாவைக் கைப்பற்றப் படையெடுத்துச் சென்றார்.

*இதுபற்றி தெரியவந்தவுடன், சீனப் பேரரசரும் அவரது மந்திரிகளும் ராஜ சூலனைத் தடுத்து நிறுத்தத் திட்டம் போட்டனர். அந்தத் திட்டப்படி, வயதான ஆண்கள் பழைய கப்பல் ஒன்றை ஓட்டிச்சென்று, ராஜ சூலனை நடுவழியில் சந்தித்தனர். சீனாவிலிருந்து புறப்பட்டு நெடுங்காலம் ஆகிவிட்டதால் தங்களுக்கும் கப்பலுக்கும் வயதாகிவிட்டதாக ராஜ சூலனிடம் வயதான சீனக் கடலோடிகள் சொன்னார்கள். சீனா மிகவும் தொலைவில் இருப்பதாக நம்பிய ராஜ சூலன், சீனாவைக் கைப்பற்றும் திட்டத்தைக் கைவிட்டார். அதற்குப் பதிலாக, கடலுக்குள் இறங்கிச்சென்று ஆழ்கடலை ஆராய, காட்சியறை கட்டித்தருமாறு சேவகர்களுக்கு உத்தரவிட்டார். பிற்பாடு, கடலடி சாம்ராஜ்யத்து இளவரசியை ராஜ சூலன் திருமணம் செய்துகொண்டார்.*

*பழங்கதைப்படி, சிங்கப்பூராவை முதன்முதலில் ஆண்ட சங் நீல உத்தமர், ராஜ சூலனின் சந்ததியைச் சேர்ந்தவர். செஜாரா மலாயுவின் குறிப்பிட்ட சில பதிப்புகளில், ராஜ சூலன், சங் நீல உத்தமரின் தாத்தா எனக் குறிப்பிடப்படுகிறார். வேறு சில பதிப்புகளில் அப்பா என்று சொல்லப்படுகிறார். சில கதைகளில், சோழ மன்னர், ராஜ சூரன் என்றும் குறிப்பிடப்படுகிறார்.*

# Myths and our History

## இதிகாசங்களும் நமது வரலாறும்

*இதிகாசங்களும் மாயாஜாலமும் நமது கடந்த காலத்தைப் பற்றி தனித்துவமான கண்ணோட்டத்தைத் தருகின்றன. சக்திவாய்ந்த மன்னர்களைப் பற்றிய கதைகள் முதல் ஆரம்பகாலச் சமுதாயங்கள் உலகை எவ்வாறு புரிந்துகொண்டன என்பதை விவரிக்கும் அன்றாட நாட்டுப்புறக் கதைகள் வரை உள்ளடங்கிய இந்தக் கதைகள், வரலாறு பதிவு செய்யப்படுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே சொல்லப்பட்டு வருகின்றன. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும், நமது கடந்தகாலத்தை நாம் நினைவில் கொள்ளும், பாதுகாக்கும், கற்பனை செய்யும் விதத்தை இந்தக் கதைகள் தொடர்ந்து வடிவமைக்கின்றன. அதோடு, நமது அடையாள உணர்வை நிர்ணயிப்பதிலும் முக்கியப் பங்காற்றுகின்றன.*

*இங்கிருந்து சிங்கப்பூர் வரலாற்றுக் காட்சிக்கூடத்தில் உங்கள் பயணத்தைத் தொடருங்கள். நமது தோற்றம் பற்றிய ஆதிகால இதிகாசங்களின் வாயிலாக சிங்கப்பூரின் 700 ஆண்டுகால வரலாற்றைக் காட்சிக்கூடம் படைக்கிறது. இன்றைய நிலைக்கு நாம் உருமாறிய வரலாற்றைத் தொகுத்தளிக்கும் வளமிக்கக் காட்சிப்பொருட்கள், பதிவேடுகள், கதைகள் ஆகியவற்றையும் அங்கு காணலாம்.*